<u>**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**</u>

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 561/2022 |
| நாள் | 09.03.2026 |
| வா.சா.2 | ரமேஷ் |
| வயது | 42 |
| ஊர் | மண்மங்கலம் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை</u>

வாதி என்னுடைய உறவினரா என்றால், இல்லை. வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது என்றால், சரியல்ல. வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணம் எழுதப்பட்டதாக கூறப்படும் தேதியில் நான் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால், நியாபகமில்லை. காலை நேரத்தில் சென்றேன். பிரதிவாதிக்கு காது கேட்காது என்ற விவரம் எனக்கு தெரியாது. நானும், பிரதிவாதியின் தகப்பனாரும், வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்தோம். நான் வாதியின் உறவினர் என்பதால் வாதிக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.</u>

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.